பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
17 04 2026 FRIDAY 12 40 PM

ஆகாஷவாணி

<u>செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

- மாநிலங்களவை துணைத்தலைவராக திரு. ஹரிவன்ஸ் மூன்றாவது முறையாக இன்று பதவியேற்றார்.
- தொகுதி மறுவரையறை, மகளிர் இட ஒதுக்கீடு மற்றும் யூனியன் பிரதேச சட்ட திருத்த மசோதா ஆகியவற்றின் மீது மக்களவையில் இன்று வாக்கெடுப்பு நடைபெறவுள்ளது.
- இஸ்ரேல்- லெபனான் இடையிலான சண்டை நிறுத்த அறிவிப்பை ஐ.நா. பொதுச்செயலர் அன்டோனியோ குட்டரஸ் வரவேற்றுள்ளார்.
- ஈரானுக்கு எதிரான போரில் அமெரிக்கா வெற்றி பெறும் என்று அதிபர் திரு. டோனல்ட் டிரம்ப் தெரிவித்துள்ளார்.
- இந்தியா- தென் ஆப்பிரிக்கா இடையேயான முதலாவது மகளிர் டுவெண்டி டுவெண்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

... இனி விரிவான செய்திகள்...

>>>>><<<<<

மாநிலங்களவை துணைத்தலைவராக திரு. ஹரிவன்ஸ் மூன்றாவது முறையாக இன்று பதவியேற்றார்.

மாநிலங்களவையில் இன்று குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் அவருக்கு பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.

நியமன உறுப்பினரான திரு. ஹரிவன்ஸ், அவையின் துணைத் தலைவராக தேர்ந்து எடுக்கப்படுவதற்கு மத்திய அமைச்சர் திரு. ஜே.பி. நட்டா முன்மொழிந்தார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி, ஹரிவன்ஸ் மாநிலங்களவை துணைத் தலைவராக திரு. ஹரிவன்ஸ், தேர்வு செய்யப்பட்டதற்கு அவையில் பாராட்டு தெரிவித்தார்.

திரு. ஹரிவன்ஸ் தனது திறமையாக அனுபவத்தின் மூலம் அவையை சிறப்பாக நடத்தி செல்வார் என்றும் அவர் கூறினார்.

அவரது தலைமைத்துவமும், செயல் திறனும் இதற்கு வடிவமைக்கும் என்றும் திரு. நரேந்திர மோடி தெரிவித்தார்.

>>>>><<<<<

மக்களவையில் இன்று தொகுதி மறுவரையறை, மகளிர் இட ஒதுக்கீடு மற்றும் யூனியன் பிரதேச சட்ட திருத்த மசோதாக்கள் மீதான விவாதம் இன்று தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இந்த விவாதத்தில் பேசிய திமுக உறுப்பினர் திருமதி. கனிமொழி, தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்களில் சட்டப்பேரவை தேர்தல் நடைபெறும் நிலையில் இந்த மூன்று மசோதாக்களை சிறப்பு அமர்வின் மூலம் மத்திய அரசு கொண்டு வந்திருப்பதாக குறை கூறினார்.

இந்த நடவடிக்கை சட்டப்பேரவைத் தேர்தல்களை பாதிக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

தமிழகத்திற்கான தொகுதி மறுவரையறை தொடர்பாக தமிழக சட்டப்பேரவையின் பரிந்துரையின் அடிப்படையிலேயே நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டிருக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

அவையில் பேசிய காங்கிரஸ் உறுப்பினர் திரு. சசி தரூர், பெண்களுக்கான இட ஒதுக்கீட்டிற்கு அனைத்து கட்சிகளுமே ஆதரவு அளித்து வரும் போதிலும் மத்திய அரசு அதனை நடைமுறைக்கு கொண்டு வரும் செயல்பாடுகள் கேள்விக்குறியதாக உள்ளது என்று கூறினார்.

மக்களவையில் இம்மசோதாக்கள் மீதான வாக்கெடுப்பு இன்று மாலை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

முன்னாள் பிரதமர் சந்திரசேகரின் பிறந்தநாள் இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி, புதுதில்லியில் உள்ள அன்னாரது நினைவிடத்தில் குடியரசுத் துணைத்தலைவர் திரு. சி.பி.ராதாகிருஷ்ணன் மலர்துவி மரியாதை செலுத்தினார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், முன்னாள் பிரதமர் சந்திரசேகரின் நூறாவது பிறந்தநாள் இன்று கொண்டாடப்படுவதாக தெரிவித்துள்ளார்.

வளமான இந்தியாவை உருவாக்குவது என்ற அன்னாரது தொலைநோக்கு பார்வையை நிஜமாக்க நடவடிக்கைககள் மேற்கொண்டு வருவதாக கூறியுள்ளார்.

>>>>><<<<<

முன்னாள் குடியரசுத்தலைவர் டாக்டர் சர்வபள்ளி ராதாகிருஷ்ணன் நினைவுநாளையொட்டி குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் மரியாதை செலுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள பதிவில், முன்னாள் குடியரசுத்தலைவர் சர்வபள்ளி ராதாகிருஷ்ணன் தலைசிறந்த தத்துவ ஞானியாவும் தேச பற்றாளராகவும் விளங்கியவர் என்றும் கூறியுள்ளார்.

நாட்டின் சிறந்த ஆசிரிய பெருமகனாகவும் டாக்டர் ராதாகிருஷ்ணன் விளங்கினார் என்றும் குடியரசு துணைத்தலைவர் தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலையின் பிறந்தநாளை ஒட்டி குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் அன்னாருக்கு புகழஞ்சலி செலுத்தியுள்ளார்.

இது தொடர்பாக திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள பதவில், விடுதைலப் போராட்டத்தில் தனக்கென தனி பாதையை உருவாக்கி போராடியவர் தீரன் சின்னமலை என்று கூறியுள்ளார்.

இளம் வயதிலேயே விடுதலை போராட்ட வீரராக உருவெடுத்த தீரன் சின்னமலை ஆங்கிலேய படைகளுக்கு தனது இறுதி மூச்சு வரை சிம்ம சொப்பனமாக திகழ்ந்தவர் என்றும் கூறியுள்ளார்.

*சுதந்திரப் போராட்டத்தில் இன்னுயிர் நீத்த பல்லாயிரக்கணக்கான வீரர்களுக்கு அவர் முன்னோடியாக திகழ்ந்தார் என்றும் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.*

*>>>>><<<<<*

*இனி தேர்தல் களம்...*

*(சவுண்ட் பைட் - மியூசிக் - 15 செகண்ட்ஸ்)*

*தமிழக சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி, தொகுதி வாரியாக எமது செய்தியாளர் வழங்கும் இந்த தொகுப்பில் இன்று இடம்பெறுகிறது ராமநாதபுரம் மாவட்டத்துக்கு உட்பட்ட தொகுதிகள்.*

*(வாய்ஸ் பைட் - தொகுப்பு - 2 min 45 sec..)*

*>>>>><<<<<*

*Hormuz நீரிணையில் எண்ணெய் கப்பல்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதற்கு இந்தியா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.*

*ஐ.நா. பொது சபையில் உரையாற்றிய ஐ.நா.வுக்கான இந்தியாவின் நிரந்தர பிரதிநிதி Harish Parvathaneni, நாட்டின் எரிசக்தி மற்றும் பொருளாதார பாதுகாப்புக்கு எண்ணெய் கப்பல்கள் Hormuz நீரிணை வழியாக தடையின்றி செல்வது முக்கியமானது என்று கூறினார்.*

*ராணுவ நடவடிக்கையின் போது எண்ணெய் கப்பல்கள் மீது தாக்குதல் நடத்துவது கண்டிக்கத்தக்கது என்றும் அவர் தெரிவித்தார்.*

*>>>>><<<<<*

*இஸ்ரேல்- லெபனான் இடையிலான சண்டை நிறுத்த அறிவிப்பை ஐ.நா. பொதுச்செயலர் அன்டோனியோ குட்டரஸ் வரவேற்றுள்ளார்.*

*இதுகுறித்து சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், இதன் மூலம் மேற்காசிய பகுதியில் அமைதியை நிலைநாட்ட முடியும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.*

*அப்பகுதியில் உள்ள அனைத்து தரப்பினரும் சண்டை நிறுத்த விதிமுறைகளை பின்பற்ற வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளார்.*

அமெரிக்கா- இஸ்ரேல்- லெபனான் இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தையை அடுத்து பத்து நாள் சண்டை நிறுத்தம் அறிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

ஈரானுக்கு எதிரான சண்டையில் அமெரிக்கா வெற்றி பெறும் நிலையில் உள்ளதாக அந்நாட்டு அதிபர் டோனல்ட் டிரம்ப் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், ஈரானின் ராணுவ தளவாடங்களை அழித்து வருவதாக கூறினார்.

ஈரான் கடற்படை முற்றிலும் அழிக்கப்பட்டதாக கூறிய அவர், அந்நாட்டின் ராணுவ இலக்குகளை தாக்கி வருவதாக டிரம்ப் தெரிவித்தார்.

>>>>><<<<<

இந்தியா- தென் ஆப்பிரிக்கா இடையிலான முதலாவது மகளிர் டுவெண்டி டுவெண்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

Durban-ல் இப்போட்டி இரவு மணி 9.30க்கு தொடங்குகிறது.

இந்த தொடரில் இரு அணிகளுக்கிடையே ஐந்து டுவெண்டி டுவெண்டி கிரிக்கெட் போட்டிகள் நடைபெறவுள்ளன.

>>>>><<<<<

ஐஎஸ்எல் கால்பந்து போட்டியில், இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களில் சென்னை அணி - தில்லி அணியையும், ஒடிசா அணி - மொஹமதன் அணியையும் எதிர்கொள்கின்றன.

>>>>><<<<<

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில், இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் குஜராத் இன்று கொல்கத்தா அணியை எதிர்கொள்கிறது.

அகமதாபாத்தில் இப்போட்டி இரவு மணி 7.30க்கு தொடங்குகிறது.

>>>>><<<<<